بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *19/12/2025* அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

## நிச்சயமாக உங்களுக்கு அல்லாஹ்வின் திருத்தூதரிடத்து மிக மேலான முன்மாதிரி உள்ளது

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۱﴾ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿۲﴾ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۳﴾ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ﴿۴﴾ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ
نَسْتَعِيْنُ ﴿۵﴾ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ﴿۷﴾

لَقَدْ كَانَ لَكُمْ فِيْ رَسُوْلِ اللّٰهِ أُسْوَةٌ حَسَنَةٌ لِّمَنْ كَانَ يَرْجُوا اللّٰهَ وَالْيَوْمَ الْاٰخِرَ وَذَكَرَ اللّٰهَ كَثِيْرًا ﴿۲۲﴾

பொருள்: அல்லாஹ்வையும் மறுமை நாளையும் (சந்திக்கப் போவதை) எதிர்பார்த்து, அல்லாஹ்வை அதிகமாக நினைவுகூர்கின்ற உங்களுக்கு நிச்சயமாக அல்லாஹ்வின் திருத்தூதரிடத்து மிக மேலான முன்மாதிரி உள்ளது. (33:22)

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:* ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடம் ஒருவர், ‘ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உயர் நல்லொழுக்கம் மற்றும் அன்னாரது முன்மாதிரியைப் பற்றி சிறிது கூறுங்கள்’ என்று கேட்டார். அதற்கு பதில் அளித்தவாறு ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள், “நீர் திருக்குர்ஆனை ஓதவில்லையா?” என்று கேட்டார்கள். அதிலோ அல்லாஹ் தானே அன்னாரது முன்மாதிரியைப் பற்றி சான்று பகர்ந்து விட்டான். இதுகுறித்து அல்லாஹ் கூறுகிறான்:

وَإِنَّكَ لَعَلٰى خُلُقٍ عَظِيْمٍ ﴿۵﴾

பொருள்: தூதரே! நிச்சயமாக நீர் மிகவும் உயர்வான நல்லொழுக்கத்தில் நிலை பெற்றுள்ளீர். (68:5)

ஒன்றில் உயர்த்தரத்தில் இருப்பவர்களே முன்மாதிரியாகத் திகழ்கிறார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பொறுத்தவரை, இறைவனுக்கான உரிமையானாலும் சரி, அல்லது அடியார்களுக்கான உரிமையானாலும் சரி, அன்னார் இவை இரண்டிலும் அல்லாஹ்வே சான்றுபகர்ந்துள்ள (அளவுக்கு) உயர்த்தரத்தைக்

கொண்டிருந்தார்கள். எனவே, அல்லாஹ் நமக்குக் கூறியுள்ளான்: இந்தத் தூதர் உங்களுக்கு முன்மாதிரி ஆவார். அவர் கூறுவதைக் கேட்பதோடு மட்டுமல்லாமல், அதன்படி அமலும் செய்யுங்கள். ஈமான் கொள்வது மட்டும் போதுமானதல்ல. நீங்கள் அமலும் செய்யும்போது, எதற்காக நான் இந்தத் தூதரை அனுப்பியுள்ளோனோ அந்தத் தரத்தை நிச்சயமாக உங்களால் பெற முடியும். ஆக, இதுதான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர்த்தரம் ஆகும்.

பெருமானார் (ஸல்) அவர்கள் தாமும் இவ்வாறு கூறியுள்ளார்கள்: நீங்கள் எனது சுன்னத்தை (நடைமுறையை)ப் பின்பற்றுங்கள். என்னுடைய அமல்கள்படி செயல்படுங்கள். ஏனென்றால், அல்லாஹ் என்னை உங்களுடைய சீர்திருத்தத்திற்காக அனுப்பியுள்ளான். நபி (ஸல்) அவர்கள், "நான் அழகிய ஒழுக்கங்களை முழுமைப்படுத்துவதற்காக தோற்றுவிக்கப்பட்டுள்ளேன்" என்று கூறினார்கள். எனவே, எவர் இந்த எல்லாப் பண்புகளையும் (ஒருங்கே) கொண்டுள்ளாரோ, எவரிடம் எல்லாப் பண்புகளும் காணப்படுகின்றனவோ அவரே நல்லொழுக்கங்களை முழுமைப்படுத்துகிறார்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:* ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் தீபாச்சா தப்ஃஸீருல் குர்ஆன் எனும் நூலிலும், நம்முடைய வாழ்க்கை வரலாறு நூல்களிலும் பெருமானார் (ஸல்) அவர்களின் நல்லொழுக்கம் மற்றும் வாழ்க்கை வரலாறு தொடர்பாக விஷயங்கள் இருக்கின்றன. சிலவற்றை இன்று நான் சுருக்கமாக எடுத்துரைக்கிறேன். இனி எப்பொழுது வாய்ப்பு கிடைத்தாலும் இவற்றின் விளக்கங்களையும் எடுத்துக் கூறிக் கொண்டே செல்வேன்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:* முதல் விஷயமோ அல்லாஹ்விற்கான உரிமை. அதாவது, அல்லாஹ்வை வணங்குவதற்கான உரிமை. இதில் நமக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் என்ன முன்மாதிரி தென்படுகிறது?

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் முழு வாழ்நாளும், இறைவன் மீதான அளவற்ற நேசத்தில் மூழ்கியிருப்பதை நாம் காண்கிறோம். புதிய ஷரீஅத்தை அமல்படுத்துவது, மக்களுக்குத் தர்பிய்யத் வழங்குவது போன்ற மிகப்பெரும் பொறுப்புகள் அன்னார் மீது இருந்தன. ஆயினும், பெருமானார் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வுக்கான உரிமையை, அதாவது, இபாதத்துக்கான உரிமையை ஒருபோதும் மறக்கவில்லை. இது மிகப் பெரிய மற்றும் மிகவும் முக்கியமான விஷயமாகும். இதற்கிடையே அன்னாருக்கு சிரமங்களும் வந்தன. போர்களுக்காகவும் செல்ல வேண்டி

வந்தது. எதிரிகள் தாக்குதல்களும் தொடுத்தனர். ஆனால், அல்லாஹ்வை வணங்குவதற்கான உரிமையை செலுத்துவதில் அன்னார் ஒருபோதும் குறை வைக்கவில்லை.

ஆக, இந்த முன்மாதிரிதான் நம் முன்னும் உள்ளது. அதாவது, நாம் எல்லா நிலையிலும் அல்லாஹ்வை முன்னிறுத்த வேண்டும். நாம் அல்லாஹ்வை முன்னிறுத்தும்போது, நம்முடைய பல்வேறு பிரச்சனைகள் தாமாகவே தீர்ந்து போய் விடும். மக்கள் தம் பிரச்சனைகளுக்காகவோ துஆ செய்கிறார்கள்தான்; ஆனால், நாம் அல்லாஹ்வுக்கான உரிமையை செலுத்துவதில்லை. எனவே, பிறகு, மனிதன் இழப்பிற்குரியவனாகி விடுகிறான்.

பெருமானார் (ஸல்) அவர்களின் இபாதத்துகளின் தரம் என்னவாக இருந்தது? ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பாதி இரவு கழிந்ததும் இறைவனை வணங்குவதற்காக எழுந்து நிற்பார்கள். இதற்கு அல்லாஹ்வும் சான்று பகர்ந்துள்ளான். இவ்வாறே பெருமானார் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றில் இந்த நிகழ்வும் கிடைக்கிறது:

பெருமானார் (ஸல்) அவர்கள் இறைவனின் மறையைக் கேட்கும்போது, குறிப்பாக, நபி (ஸல்) அவர்களுக்கு அன்னாருடைய பொறுப்புகள் குறித்து கவனமூட்டப்பட்டுள்ள வசனங்கள் வரும்போது, கட்டுப்பாடின்றி அன்னாருடைய கண்களில் கண்ணீர் வந்து விடும். ஒருமுறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழிகாட்டலுக்கு இணங்க ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி) அவர்கள் சூரா அந்நிஸா ஓதிக் காட்டத் துவங்கினார்கள். ஓதியவாறு இந்த வசனத்தை அடைந்தார்கள்:

فَكَيْفَ اِذَا جِئْنَا مِنْ كُلِّ اُمَّةٍۭ بِشَهِيْدٍ وَّجِئْنَا بِكَ عَلٰى هٰۤؤُلَاۤءِ شَهِيْدًا ۝٤٢

பொருள்: நாம் ஒவ்வொரு சமுதாயத்திலிருந்தும் அதன் நபியை அவருடைய சமுதாயத்திற்கு முன்னால் நிற்க வைத்து, அந்த சமுதாயத்தின் கணக்கு வழக்கைப் பார்க்கும் போதும், உம்மையும் உமது சமுதாயத்துக்கு முன்னால் நிற்க வைத்து, அதற்கான கணக்கு வழக்கைப் பார்க்கும் போதும், அப்பொழுது நிலை என்னவாகும். (4:42)

அப்பொழுது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், “போதும், போதும்” என்று கூறினார்கள். சஹாபி (ரலி) அவர்கள், ‘நான் அன்னாரை நோக்கி பார்த்தபோது, அன்னாருடைய இரு கண்களிலிருந்தும், தாரை தாரையாக கண்ணீர் வழிந்துக் கொண்டிருந்தது’ என்று கூறுகிறார்கள். இந்த அளவுக்கு அன்னாருக்கு உருக்கம் ஏற்பட்டு விட்டது.

அந்த நேரத்தில் அன்னாருக்கு நிச்சயமாக சமுதாயம் குறித்தும் கவலை ஏற்பட்டிருக்கும். அல்லாஹ்வின் விருப்பமின்மைக்கு ஆளாகக்கூடிய எந்த செயலையும் எனது சமுதாயம் செய்து விடக்கூடாது; இவ்வாறு, நான் அவர்களுக்கு எதிராக சாட்சி பகரும் நிலை வரக்கூடாது (என்று கவலை கொண்டிருப்பார்கள்).

*ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:* எனவே, தொழுகையைக் கடைபிடிப்பதை எடுத்துக் கொள்ளுங்கள்! இதில் அன்னாருக்கு எந்த அளவுக்கு அக்கறை இருந்தது என்றால், கடுமையான நோயின் நிலையிலும், படுத்துக்கொண்டு தொழுது கொள்வதற்கான அனுமதி இருக்கின்ற இறுதி நாள்களிலும், வரலாற்றில் வருகிறது, பெருமானார் (ஸல்) அவர்கள் மக்களுடைய கைத்தாங்கலாக பள்ளிவாசலை நோக்கிச் சென்றார்கள்.

இவ்வாறே பெருமானார் (ஸல்) அவர்கள் சிரமப்பட்டு செய்யும் இபாதத்தையும் விரும்ப மாட்டார்கள். இபாதத்கள் பக்கம் இவ்வளவு கவனமூட்டி வந்த பிறகும்கூட, பெருமானார் (ஸல்) அவர்கள், “சிரமம் இருக்கக் கூடாது” என்று கூறி வந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள், ஒவ்வொருவரும் தனது மனதில் புத்துணர்ச்சி இருக்கும் வரை மட்டுமே இபாத் செய்ய வேண்டும். களைப்படையும்போது, உட்கார்ந்துக் கொள்ள வேண்டும். சிரமப்பட்டு செய்யும் இபாதத் எந்தப் பலனும் சேர்க்க முடியாது” என்று கூறினார்கள்.

*ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:* இன்றைய காலத்து மக்களுக்கு நான் இதையும் கூறிவிடுகின்றேன், துன்பத்தில் ஆழ்த்திக் கொள்ள வேண்டிய தேவையில்லை; எனவே வேகவேகமாக தொழுது கொள்ளலாம்; இது ஒரு கடமையாகும், நிறைவேற்றினோம்; தலையிலிருந்து இறக்கி வைத்து விட்டோம் என்ற அர்த்தமும் இதற்குக் கிடையாது... பலமுறை என்னிடம், இங்கும் மக்கள், ‘எப்படித் தொழ வேண்டும்?’ என்று கேட்டு விடுகிறார்கள். ஆக, தொழுகையை நிறுத்தி நிதானமாகத் தொழ வேண்டும்.

மாநபி (ஸல்) அவர்களுக்கு இறைவனுக்கு முன் எந்த அளவுக்குப் பணிவு இருந்தெனில், மக்கள் அன்னாரிடம், “தாங்களோ தங்களுடைய அமல்களின் வலுவால் இறைவனின் அருளைப் பெற்றுக் கொள்வீர்கள். ஏனென்றால், அல்லாஹ் தங்களுக்கு சான்றிதழ் வழங்கிவிட்டான். தங்களுடைய முன்மாதிரியை முஸ்லிம்களுக்கு அமல் செய்வதற்கான ஒரு தரமாக நிறுத்திவிட்டான்” என்று கூறினார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள், “இல்லை! இல்லை! நானும் இறைவனுடைய பேரருளினாலேயே மன்னிக்கப்படுவேன்” என்று கூறினார்கள்.

பிறகு அன்னார் அறிவுரை வழங்கியவாறு, “உங்களுடைய வேலைகளில் நன்மையை மேற்கொள்ளுங்கள். இறைவனுடைய நெருக்கத்திற்கான வழிகளைத் தேடுங்கள்” என்று கூறினார்கள். மேலும், “உங்களில் எவரும் தனது மரணத்துக்கு ஆசைப்பட வேண்டாம். அவர் நல்லவர் என்றால், உயிருடன் இருந்து தன்னுடைய நன்மைகளில் இன்னும் முன்னேறி விடுவார். தீயவர் என்றால், உயிருடன் இருந்து அவருக்கு தன் பாவங்களிலிருந்து தவ்பா செய்வதற்கு நல்வாய்ப்பு கிடைக்கும்” என்றும் கூறினார்கள்.

இது ஒரு மிகவும் முக்கியமான அறிவுரையாகும். இதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். அதாவது, ஒருபோதும் மரணத்துக்கு ஆசைப்படக்கூடாது.

ஹுஸூர் (ஸல்) அவர்களின் அமல்கள் தொடர்பாக ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் ஓரிடத்தில் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வாழ்வில், அன்னாருக்கு முன்னால் இரண்டு வழிகள் திறந்திருந்து, அன்னார் அவ்விரு வழிகளில் எளிமையான வழியைத் தேர்ந்தெடுக்காமல் இருந்தது ஒருபோதும் நடக்கவில்லை. எனினும், எளிய வழியைத் தேர்ந்தெடுப்பதில் பாவத்திற்கான எந்த சாத்தியமும் இல்லாமல் இருப்பது நிபந்தனை.

மனித குலத்துடன் நடந்து கொள்வதைப் பொறுத்தவரை அதில் அன்னாரது வீட்டிலிருந்து துவங்குவோம். அன்னார் துணைவியார்களுக்கான உரிமைகளில் எப்படி நடந்து கொண்டார்கள் என்று பார்ப்போம். மிகவும் பரிவான மற்றும் நீதியான அணுகுமுறையாக இருந்தது. இன்றைய காலத்து மக்களும் இதைப் புரிந்து கொண்டால், வீடுகளின் பல சண்டைகள் மற்றும் குழப்பங்கள் அகன்று விடும்.

அன்னாரது பொறுமையின் நிலை எப்படியிருந்தது என்றால், அல்லாஹ் அன்னாருக்கு அரசாட்சி வழங்கியபிறகும்கூட, அன்னார் ஒவ்வொருவர் கூறுவதையும் கேட்பார்கள். யாராவது ஒருவர் கடுமை காட்டினாலும் அன்னார் அமைதியாகி விடுவார்கள். சிலவேளை மக்கள் அன்னாருடைய வழியைத் தடுத்து நின்று கொள்வார்கள். தம்முடைய தேவைகளை எடுத்துக் கூறத் தொடங்கி விடுவார்கள். அவர்கள் தம் விஷயங்களை முடித்து விடாத வரை அன்னார் நின்று கொண்டிருப்பார்கள். பிறகு, அன்னார் அடுத்துச் செல்வார்கள்.

*ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:* ஹஸ்ரத் நபி பெருமானார் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றின் இன்னும் பல விஷயங்கள் இருக்கின்றன. அன்னாருடைய நீதி,

உணர்வுகளுக்கு மதிப்பளித்தல், ஏழைகள் மீது அக்கறை காட்டுதல், ஆகியவை தொடர்பாக உள்ளன. இவை நமக்கு ஒரு முன்மாதிரியாகும்.

எனவே, நாம் நபி பெருமானார் (ஸல்) அவர்களின் முன்மாதிரியின் படி செயல்பட்டவாறு, உண்மையான முஸ்லிம்களாக ஆவதற்கு முயற்சி செய்வோமாக! அன்னாரது இந்தத் தூதுச் செய்தியை உலகில் எட்ட வைக்கக்கூடியவர்களாகவும் இருப்போமாக! இவ்வாறு உலகத்தையும் நாம் அன்னாரது கொடியின் கீழ் கொண்டு வருபவர்களாக இருப்போமாக! எல்லாம் வல்ல அல்லாஹ் நமக்கு அதற்கான நல்வாய்ப்பு வழங்குவானாக!

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ وعَلٰى آلِ مُحَمَّدٍ وَبَارِكْ وَسَلِّمْ اِنَّكَ حَمِيْدٌ مَجِيْدٌ

*இறுதியில் ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் ஜமாஅத்தின் முரப்பி* ***மதிப்பிற்குரிய லெயீக் அஹ்மத் தாஹிர்*** *அவர்களுக்கு ஜனாஸா ஹாஸிர் தொழுகையும், மாலீயின் மண்டலமான ஸோகோவின் நாயிப் சத்ர்* ***மதிப்பிற்குரிய ஸீகா ஜாலூ சாஹிப்*** *அவர்களுக்கு ஜனாஸா காயிப் தொழுகையும் தொழவைப்பதாக அறிவிப்பு செய்தார்கள்.*

*மர்ஹூம்கள் இருவரின் நற்பண்புகளையும் எடுத்துரைத்து, இவர்கள் இருவரின் பாவமன்னிப்பு மற்றும் உயர்ப்படித்தரத்துக்காக துஆ செய்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ! اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ

اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِىَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّا اِلٰهَ

اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ

وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ

وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: முரப்பி அத்தாவுல் முஃக்னீ)**